


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2049 செப்டம்பர் 13, 2018 புரட்சி 17 முழக்கம் 35 விலை: ரூ.3.00

தலையங்கம்

# ஒன்றுபட்ட தமிழகம் — 7 தமிழர் விடுதலைக்குக் காத்து நிற்கிறது

உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து தமிழக அமைச்சரவை 161ஆவது விதியின் கீழ் இராஜீவ் கொலை வழக்கில் 27 ஆண்டுகளாக சிறையில் வாடும் 7 தமிழர்களை விடுதலை செய்ய ஆளுநருக்கு பரிந்துரைத்துள்ளதை வரவேற்று பாராட்டுகிறோம். தமிழ்நாட்டின் வரலாற்றில் இது வரை இல்லாத ஒரு அதிசயமாக தமிழக அரசின் இந்த முடிவை அனைத்துக் கட்சிகளும் இயக்கங்களும் ஒருமித்து வரவேற்றிருப்பதைப் பெருமையுடன் சுட்டிக்காட்ட வேண்டும். இப்படி ஒரு பொதுக் கருத்தை தமிழ் மண்ணின் உணர்வாக மாற்றியது கடந்த காலங்களில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட பரப்புரைகளும் போராட்டங் களும், செங்கொடியின் உயிர்த் தியாகமும்தான். சமுதாயத்தைப் பக்குவப்படுத்தி விட்டால் சட்டம் அதன் பின்னால் ஓடி வரும் எனும் சமூகவியலை இது மெய்ப்பித்திருக்கிறது. இதுவே இந்த மண்ணை சமூகநீதிக்கும் சுயமரியாதைக்குமான விளைச்சல் பூமியாக்கிட பெரியார் பின்பற்றிய அணுகுமுறையும்கூட!

மாநில அரசுக்கு அரசியல் சட்டப் பிரிவு 161இன் கீழ் வழங்கப்பட்ட உரிமை ஒரு கூட்டாட்சி அமைப்பில் மாநில இறையாண்மையை உறுதி செய்கிறது. இதே வழக்குகளில் மாநில அரசுக்கு உரித்தான இந்த உரிமைகளை உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் வலியுறுத்தியிருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

1999ஆம் ஆண்டு தமிழக ஆளுநராக இருந்த பாத்திமா பீவி தண்டனைக் குறைப்புக்காக தன்னிடம் வந்த கருணை மனுக்களை நிராகரித்து அவரே தூக்குத் தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட்டபோது சென்னை உயர்நீதிமன்றம் வழியாக, அந்த முறைகேடான முயற்சி முறியடிக்கப்பட்டது. ‘ஆளுநரின் முடிவு தன்னிச்சையானது; சட்டவரையறைக்கு உட்பட்டதல்ல’ என்று தீர்ப்பளித்த சென்னை உயர்நீதிமன்றம், ‘மாநில அமைச்சரவையின் பரிந்துரை அடிப்படையிலேயேதான் முடிவு எடுக்க முடியும்’ என்று தீர்ப்பளித்தது. அன்றைய கலைஞர் தலைமையிலான அமைச்சரவை பரிந்துரையின் அடிப்படையில் (25.4.2000) நளினியின் தூக்குத் தண்டனையை 161ஆவது பிரிவைப் பயன்படுத்தி ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. தூக்குக்கு உத்தரவிட்ட ஆளுநர், பிறகு அமைச்சரவை பரிந்துரைக்குப் பணிந்து, நளினிக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் முடிவுக்கு ஒப்புதல் தர சட்டம் அவரை நிர்ப்பந்தித்தது.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி குடியரசுத் தலைவர் வழியாக கருணை மனுக்களை தள்ளுபடி செய்து தூக்குத் தண்டனையை உறுதி செய்த நிலையில் கருணை மனு போட்டு 11 ஆண்டுகால தாமதத்துக்குப் பிறகு தூக்குத் தண்டனையை நிறைவேற்ற முடியாது என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் 2013இல் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு, வீரப்பன் வழக்கில் தொடர்புடைய நால்வர் மற்றும் இராஜீவ் வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருந்த மூவர் உள்ளிட்ட 15 பேரின் மரணதண்டனையைக் குறைத்து ஆயுள் தண்டனையாக்கியது (21.10.2014). தொடர்ந்து இந்த மூவர் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, ஆயுள் தண்டனை என்பது வாழ்நாள் முழுதும் சிறை என்றிருந்தாலும், இவர்களுக்கான தண்டனைக் காலத்தை உரிய அரசாங்கம் (Appropriate Government) குற்றவியல் நடைமுறைச் சட்டம் 432-அய் பயன்படுத்தி குறைக்கலாம் என்று தெளிவுபடுத்தியது. அந்த அடிப்படையில்தான் அன்று தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய 432ஆவது பிரிவைப் பயன்படுத்தினார். தண்டனைக் குறைப்புக்கு உரிய அரசு மாநில அரசுதான் என்பதை உறுதி செய்து, 7 தமிழர்களையும் விடுதலை செய்ய அமைச்சரவையைக் கூட்டி முடிவெடுத்தார் (19.2.2014). ஆனாலும் இந்த வழக்கை மத்திய அரசின் அமைப்பான சி.பி.அய். விசாரணைக்குட்பட் டிருந்தாலும் மத்திய அரசிடம் கலந்தாய்வு செய்து முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுவதாலும் (பிரிவு 435(1)(a)) - மத்திய உள்துறையிடம் ஆலோசனை கேட்டு தமிழக அரசு கடிதம் எழுதியது. 3 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும் என்று தமிழக முதல்வர் கெடு விதித்தார். பதில் தருவதற்கு மீண்டும் தேவையற்ற காலதாமதத்தை மத்திய அரசு உருவாக்கக் கூடும் என்பதால் விதிக்கப்பட்ட ‘கெடு’ அது. ஆனால் நடுவண் ஆட்சியோ மாநில அரசின் இறையாண்மையை சற்றும் மதிக்காமல் பதில் கூட அளிக்காமல் நேரடியாக உச்சநீதிமன்றம் சென்று தமிழக அரசின் விடுதலை முயற்சிக்குத் தடை ஆணையை வாங்கியது (20.2.2014). இதில் முடிவெடுக்கக்கூடிய ‘உரிய அரசு’ நடுவண் அரசே தவிர, மாநில அரசு அல்ல என்று வாதிட்டது.

விடுதலையைத் தாமதப்படுத்த வேண்டும் என்ற நடுவண் அரசின் நோக்கம் ஓரளவு வெற்றியும் பெற்றது. ‘உரிய அரசு’ எது என்பதை முடிவெடுக்கவும், வழக்கோடு தொடர்பே இல்லாத வேறு பிரச்சினைகளையும் இணைத்து 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

இந்த அமர்வு, 3 மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டாலும், 41ஆவது தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றிருந்த லோதா, தனது 5 மாத பதவிக் காலத்தில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்காமல் ஓய்வு பெற்றதோடு, அடுத்து 42ஆவது தலைமை நீதிபதியாக வந்த நீதிபதி தத்து, பதவி ஏற்று ஓராண்டுக்குப் பிறகு தான் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் அமர்வையே நியமித்தார். நீண்ட தாமதத்துக்குப் பிறகு இந்த அமர்வு இரண்டு தீர்ப்புகளை வழங்கியது. மூன்று நீதிபதிகளுக்கான தீர்ப்பை நீதிபதி கலிஃபுல்லாவும் இரண்டு நீதிபதிகளுக்கான தீர்ப்பை நீதிபதி லலித்தும் வழங்கினர். நீதிபதி கலிஃபுல்லா எழுதிய தீர்ப்புக்கு கையெழுத்திடவே தலைமை நீதிபதி தத்து, தனது பணி ஓய்வு நாளான 2015 டிசம்பர் 2 வரை காத்திருந்தார்.

மேற்சொன்ன இரண்டு தீர்ப்புகளில் இந்த வழக்கில் முடிவெடுக்கக் கூடிய உரிய அரசு எது என்பதை திட்டவட்டமாகக் கூறாமல் மூவர் கொண்ட வேறு ஒரு உயர்நீதிமன்ற அமர்வு முடிவு செய்யட்டும் என்று நீதிபதி கலிஃபுல்லா தீர்ப்பு எழுதி விட்டார். முடிவு எடுக்கும் உரிமை மாநில அரசுக்குத் தான் என்று நீதிபதி லலித் தீர்ப்பு எழுதினார். ஆனால் இரண்டு தீர்ப்புகளும் தண்டனைக் குறைப்புக்கு மாநில அரசுக்கு 161ஆவது பிரிவு வழங்கும் அதிகாரத்தில் நீதிமன்றங்கள் கை வைக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறி விட்டன. (Article 72 or Article 161 of the constitution will always be available being Constitutional Remedies untouched by the Court) (சட்டப் பிரிவு 72 - குடியரசுத் தலைவருக்குரிய தண்டனைக் குறைப்பு அதிகாரம் பற்றியது)

இதற்குப் பிறகு உச்சநீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 432ஆவது பிரிவில் தண்டனைக் குறைப்பு வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கே உண்டு என்று தீர்ப்பளித்தது. வழக்கு ஒரு கட்டத்தில் தேங்கிப்போய், 7 தமிழர் விடுதலைக்கு வழியே இல்லை என்ற நிலை உருவானது. பேரறிவாளன் தளரவில்லை; தனது சட்டப் போராட்டத்தை சிறைக்குள்ளிருந்தே மேலும் நகர்த்தினார்.

2010லிருந்து 2015 வரை தண்டனைக் குறைப்பு செய்த கைதிகளின் விவரங்களை நடுவண் அரசு தெரிவிக்கக் கோரி தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பேரறிவாளன் கேட்டார். தகவல் தர உள்துறை அமைச்சகம் மறுத்தது. தகவல் ஆணையருக்கு மேல் முறையீடு செய்தார். உள்துறை அமைச்சகத்தின் மறுப்பை தகவல் ஆணையம் ஏற்க மறுத்ததோடு இந்த விவரங்களை அரசே இணையத்தில் வெளியிட உத்தரவிட்டது. நம்பிக்கைக் கீற்று பளிச்சிடத் தொடங்கியது.

அதற்குப் பிறகு தமிழக ஆளுநருக்கு 2015ஆம் ஆண்டு 161ஆவது பிரிவின் கீழ் தாம் விண்ணப்பித்திருந்த தண்டனைக் குறைப்புக் கோரும் மனுவுக்கு ஆளுநர் எந்த முடிவையும் எடுக்காமல் இரண்டு ஆண்டுகளாகத் தாமதப்படுத்துவதற்கு விளக்கம் கேட்டு பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தில் மனுப் போட்டார்; மீண்டும் 161 பிரிவுக்கு உயிர் கொடுக்க முயன்றார். கடந்த ஆக.20இல் தாக்கல் அவர் செய்த மனுவுக்கு நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு, ஆளுநர் பேரறிவாளன் மனுவை பரிசீலிக்கலாம் என்ற ஆணையைப் பிறப்பித்தது.

ஏழு தமிழர்கள் சார்பில் பேரறிவாளன் நடத்திய நீண்ட சட்டப் போராட்டம் இப்போது பேரறிவாளன் மனுவின் வழியாகவே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இராஜீவ் கொலை வழக்கில் இப்போது குற்றம்சாட்டப்பட்டவர் களுக்கு அதில் நேரடி தொடர்பே இல்லை. நேரடி தொடர்புள்ளவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். தேடுதல் வேட்டையில் காவல் துறையால் சுடப்பட்டு 16 பேர் இறந்து விட்டனர்.

காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சேயை 16 ஆண்டுகளிலேயே காங்கிரஸ் ஆட்சியே தண்டனைக் குறைப்பு செய்து விடுதலை செய்தது. தமிழ்நாட்டு சிறைகளில் 20 ஆண்டு சிறைத் தண்டனை கழித்த சிறைவாசிகள், தண்டனைக் குறைப்புக் கேட்க தமிழக அரசே சட்டம் இயற்றியிருக்கிறது.

அது மட்டுமின்றி, தண்டனைக் குறைப்புக்கு செய்த குற்றங்களைப் பார்க்கக் கூடாது; சிறைவாசியாக இருந்த காலத்தில் நன்னெறிகளைப் பின்பற்றினார்களா என்ற நடத்தைகளைத் தான் பார்க்க வேண்டும். ஆனால் குற்றங்களையே பேசிக் கொண்டிருந்தது நடுவண் ஆட்சி!


இராஜீவ் கொலைக்குப் பயன்படுத்திய ‘மனித வெடிகுண்டு பெல்ட்டை’ தயாரித்தது யார் என்பது இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இதன் பின்னணியில் அந்நிய சதி இருந்ததா என்பதைக் கண்டறிய வேண்டும் என்று ஜெயின் ஆணையம் கூறி, அதன்படி விசாரிக்க நியமிக்கப்பட்ட பல்நோக்கு விசாரணை ஆணையத்தின் விசாரணையும் முடியவில்லை. இவ்வளவுக்கும் பிறகு, 27 ஆண்டு சிறை வாழ்க்கையை அனுபவித்தவர்களுக்கு சட்டம் அனுமதிக்கும் உரிமைகளை மறுப்பது நியாயமல்ல; ஆளுநர்களைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் வழியாக நடுவண் அரசு தடுக்க முயற்சிக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

இந்தியாவில் நடப்பது ஜனநாயக நாடாளுமன்ற ஆட்சி முறையே தவிர, குடியரசுத் தலைவர் ஆட்சி அல்ல என்பதையும் நினைவூட்டுகிறோம்.

மாநில அரசின் மதிப்புமிக்க உரிமைகளான 161ஆவது பிரிவை மீண்டும் உறுதிப்படுத்தி, தங்கள் விடுதலையோடு மாநில உரிமைகளையும் மீட்டுத் தந்த 7 தமிழர் வருகையை தமிழகம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

# அறிவியலுக்கு எதிரான விநாயகன் கதை!

*விநாயகன் பிறப்புப் பற்றி பெரியார் எழுதிய கட்டுரை.*



சதுர்த்தி விநாயகர் எனும் கடவுள் இந்த நாட்டிலே உற்பத்தியான கடவுள் என்றும் சொல்ல முடியாது. வடநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கே இவ்வளவு கூத்தடிக்கப் படுகிறது. ஆற்றங்கரையோரம், அரசமரத்தின் கீழ், குளத்தங்கரையிலும், வீதிகளின் சந்தியிலும் வைக்கப்பட்டு இருக்கும் இந்தக் கடவுளின் யோக்கியதையைச் சொல்லப் போனால் அது ஏனைய 'கடவுள்'களுக்கு மிகவும் வெட்கக் கேடாகும். அதாவது, இவருடைய பிறப்பின் வரலாறு அந்தப் பார்ப்பனர்களாலேயே எழுதப்பட்ட புராணங்களில் இருந்து பார்த்தாலும் கூட மிக மிக மோசமாக உள்ளது.

விநாயகர் பிறப்புப் பற்றி மூன்று வரலாறு உள்ளது. நம் மக்களுக்கு இவற்றில் இருந்து 'இது உண்மையில் கடவுள்' என்று சொல்ல முடியுமா என்பதை அறிய முடியவில்லை. சிவன் என்ற கடவுளின் மனைவி பார்வதி குளிக்கப் போனாளாம். தான் குளிக்கின்றபோது யாராவது அந்த அறைக்குள் புகுந்துவிடக்கூடாதே என்று பயந்து குளிக்கும் அறைக்கு வெளியே காவல் வைப்பதற்கு ஒரு உருவத்தை உற்பத்தி செய்தாளாம். அந்த உருவத்தை எப்படி உற்பத்தி செய்தாள் என்பது தான் கடவுள் தன்மையை விளக்கும் அதிசயம். முதலாவதாக, பெண்கள் குளிக்கும்போது அங்கு அந்த அறைக்கு ஆண்கள் போவது சர்வசாதாரணமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், யாராவது வந்து விடுவார்களோ என்ற பயம் இருந்திருக்கத் தேவையில்லை; காவல் செய்யவும் ஆள் தேவையில்லை. அடுத்தபடியாக, ஆண்கள் யாராவது வந்து விடுவார்கள் என்ற பயம் இருந்தால் விநாயகர் என்று செய்யப்பட்ட அந்த உருவம் ஆண் உருவம் தானே! ஆண்கள் வந்துவிடக் கூடாதென்ற நினைப்பினால் ஒரு ஆணையே உற்பத்தி செய்து சதா நேரமும் பார்த்துக்கொண்டு இருக்கச் செய்வது எவ்வளவு புத்திசாலித்தனம்?

குளிப்பதற்காகச் சென்ற பார்வதி தன் உடம்பின் மேல் உள்ள அழுக்கை உருட்டி ஒரு உருண்டை பிடித்து, அதை வாசற்படியில் வைத்து உயிர் கொடுத்தாள் என்று கூறப்படுகிறது. இதுதான் விநாயகர்!

ஒரு மனிதனுடைய எடைக்கு ஏற்றவாறு அத்தனை பெரிய அழுக்கு பார்வதியின் மேல் இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா? எனவே, சுத்த ஆபாசமும் அசுத்தமும் நிறைந்தவளாகவே நாம் அவளைக் கருதவேண்டியுள்ளது. அடுத்தப்படியாக, அவள் குளிக்கும்போது அங்கே வருகின்றான் சிவன். சிவனைக் கண்டதும் உமா கேட்கின்றாள், "இங்கே எப்படி வந்தீர்? நான் குளிக்கும் போது நீர் வரலாமா? ஒரு ஆளை நடையில் காவல் வைத்து இருந்தேனே, அவனை எப்படி தட்டிக் கழித்துக் கொண்டு வந்தீர்கள்?" என்றதும், அதற்குப் பரமசிவன் கூறுகின்றார், "நான் வரும்போது நடையிலே ஒருவன் நின்று கொண்டு வழி மறித்தான்; நான் இங்கே வரவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவன் விடமாட்டேன் என்றான்; யாராய் இருந்தாலும் சரி, கணவனாய் இருந்தாலும் விட மாட்டேன் என்றான்! என்னைவிடாமல் தடுத்தான். எனவே நான் என் கை வாளால் அவன் தலையைச் சீவினேன். பிறகு தடையின்றி உன்னைக் காண வந்தேன்" என்றான். இதிலே குளிக்கும் பெண் தன் மனைவியாய் இருந்தாலும்கூட அவனுக்கு அங்கே என்ன வேலை?

இரண்டாவது அதற்காக ஒரு மனிதனையே கொலை செய்துவிட்டுப் போகவேண்டிய அவ்வளவு பெரிய சங்கதி அங்கே என்ன நடந்துவிட்டது? மூன்றாவது அவள் கணவனே என்று தெரிந்த பின்னும் பரமனை அவன் தடுத்தது எவ்வளவு முட்டாள்தனம்? இவற்றை எல்லாம் யோசனை செய்தால் இது ஒரு அண்டப் புளுகு என்பதும், முட்டாள்தனமான நடவடிக்கை என்பதும் விளங்கும். இதனை அறிந்த பார்வதி, துடிதுடித்துக் கொண்டு ஓடி வந்து பார்க்கின்றாள். தலைதுண்டாக்கப்பட்டு உள்ளது. ஆனால் துண்டாக்கப்பட்ட தலையை அங்கே காணோம். உடனே பரமனை நோக்கி "நாதா என் அருமைச் செல்வம் - என் குழந்தை போன்று நான் உற்பத்தி செய்த அந்த அருள் செல்வத்தை எனக்குத் தாங்கள் தந்தாக வேண்டும். இல்லையேல் என்னால் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது!" என்று கூறினாள். பிறகு இதைக் கேட்ட பரமன் என்ன செய்வதென்று யோசித்து, கடைசியாக ஒரு யானையின் தலையைக் கொய்து அந்த முண்டத்தின் மேல் வைக்கின்றான். உடனே அந்த முண்டம் யானைத் தலை கொண்ட விநாயகர் ஆகிறது. இது ஒரு கதை.

மற்றொன்று பரமனும், பார்வதியும் ஒரு நாள் வனத்திற்குச் சென்ற போது, ஒரு ஆண் யானையும், பெண் யானையும் கலவி செய்து கொண்டு இருந்ததைப் பார்வையிட்டனர். அதை பார்த்த ஆசையில் பரமனும் பார்வதியும் யானை வடிவில் உருமாறிக் கலவி செய்து பெற்றது தான் விநாயகர்.

மூன்றாவது, ஒரு நாள் பார்வதியும் பரமனும் போய்க்கொண்டு இருக்கையில், ஒரு யானையின் உருவம் (பொம்மை) ஒன்றைக் கண்டார்களாம். ஆகவே, அதன் மேல் மோகம் கொண்ட பார்வதியும் அதுபோல் பிள்ளை பிறக்கவேண்டும் என்ற நினைத்தாளாம் . ஆகவே, அப்படிப் பிறந்தது தான் விநாயகர் என்றும் கூறுகிறார்கள். ஆகவே இந்த மூன்று கதைகளையும் தெரிந்த மக்களே இந்தப்படி மண்டையை உடைப்பார்கள் என்றால் , இவர்களின் புத்திகெட்டத் தன்மையை, முட்டாள்தனத்தைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியுமா? இந்தப்படி ஆபாசமான கதையை எழுதி நம்மை நம்பும்படிச் செய்துவிட்டனர் பார்ப்பனர். ஆகவே, இது சிவனும் சுப்பிரமணியனும் வந்த காலத்திலே வந்தது, வட நாட்டான் இங்கு கொண்டுவந்து விளம்பரம் செய்துவிட்டான். அது இப்போது பெரிய கடவுளாக மதிக்கப்பட்டு எல்லாக் காரியங்களுக்கும் முன்னே வைக்கும் இடத்தைப் பெற்றுவிட்டது. ஆனதால் தான் பிள்ளையார் சதுர்த்தி- விநாயகர் சதுர்த்தி என்று ஆடம்பரமான நாளைக் கொண்டாடுகிறார்கள். எனவே, இதை எல்லாம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தால், பகுத்தறிவைப் பயன்படுத்திப் புகுந்து பார்த்தால் மனிதனுக்கு இதன் உண்மை புலனாகும். ஆனால் நாம் அப்படிச் செய்வது இல்லை. இதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம்.

**– பெரியார்**

### பரமசிவனின் 'என்கவுண்டர்'

- கதவுகள் இல்லாத குளியல் அறைக்கு குளிக்கப் போகிறாள் பார்வதி. புராண காலத்திலேயே குளியலறை இருந்திருக்கிறது. ஆனால் கதவு மட்டும் இல்லை. 'சோப்பு' தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தக் கதை தெரிந்தால் 'இதுதான் பார்வதி குளித்த' சோப் என்று தொலைக்காட்சி விளம்பரம் வந்திருக்கும். இனி அப்படி ஒரு விளம்பரம் வந்தாலும் வியப்பதற்கு இல்லை.
- குளியலறைக்குள் எவரும் நுழைந்துவிடக் கூடாது என்பதற்கு 'வாட்ச்மேன்' ஒருவனை பார்வதி தயார் செய்திருக்கிறார். அந்த 'வாட்ச்மேன்'தான் 'விநாயகன்'. பார்வதி எனும் பெண் குளிக்கும் இடத்துக்குள் ஒரு ஆண் நுழைந்து விடாமல் தடுக்க 'வாட்ச் வுமன்' (Watch woman) ஒருவரை தயார் செய்யாமல், ஏன் 'வாட்ச்மேன்' என்ற ஆண் நபரை தயார் செய்தார் என்று பெரியார் கேட்கிறார். அற்புதமான கேள்வி!

  நட்சத்திர ஓட்டல் குளியலறைக்குள்ளும் சில 'பெண்கள் விடுதி குளியலறைகளிலும் 'சி.சி. டி.வி.' கேமிராக்கள் திருட்டுத்தனமாக பொருத்தப்படுகிறது என்ற செய்திகள் அவ்வப்போது வருகின்றன. பரமசிவன் என்று ஒரு கடவுள் இப்போது இருந்திருந்தால் 'இரகசிய சி.சி.டி.வி காமிரா'வுக்கு ஏற்பாடு செய்திருப்பான். விநாயகன் கதைக்கே வேலை இல்லாமல் போயிருக்கும். விநாயகன் சிலை ஊர்வலமும் இருந்திருக்காது.
- பார்வதி உற்பத்தி செய்த 'விநாயகனின்' மூலப் பொருள் அழுக்கு. அழுக்கு கடவுள் உற்பத்திக்கான கச்சாப் பொருளாக பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இப்படி ஒரு தொழில்நுட்பம் நமது புராண காலத்திலேயே இருந்தது என்ற தகவலை, நமது 'பாரதப் பிரதமர்' மோடியின் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறோம். அடுத்து அவர் பங்கேற்கவிருக்கும் விஞ்ஞானிகள் மாநாட்டில் இந்த புராண காலத்து அறிவியல் பெருமையை மார்தட்டிக் கூறுவார் அல்லவா?
- பார்வதியால் இவ்வளவு தடைகள் போடப்பட்டிருந்தாலும்கூட பரமசிவன் 'என்ட்ரி'யை தடுக்க முடியவில்லை. குளியலறைக்குள் தன்னை உள்ளே போகக் கூடாது என்று மிரட்டிய 'விநாயகனை', 'என்கவுன்டரில்' போட்டுத் தள்ளிவிட்டு பரமசிவன் குளியலறைக்குள் நுழைந்து விட்டான். அங்கே தான் சிவன் நிற்கிறான் போங்க!
- 'என் கவுன்டரில்' தலையை இழந்து நின்ற விநாயகனைப் பார்த்து பார்வதி பதறிப் போனாள். 'நான் உருவாக்கிய விநாயகனின் தலை போய்விட்டதே' என்று அழுது புரண்டாள். மனித உரிமை ஆணையம் அன்று இல்லை. இருந்திருந்தால் புகார் தந்திருப்பாள்!



விநாயகன் 'கொடுத்து வைத்தவன்' அப்போது தலையை மட்டும்தான் இழந்தான். இப்போது கதையே வேறு! இந்த இந்து முன்னணிகள் அதையும் தாண்டிய சித்திரவதைகளை ஈவிரக்கமின்றி செய்கிறார்கள்.

கடலில் கரைக்கப்படும் பரிதாபத்துக்குரிய அந்த விநாயகனைப் பார்த்தால் கண்ணீர் தான் வரும். கால்களை தலைகளை வயிற்றை அடித்து உடைத்து நசுக்கித்தான் விநாயகனை கடலுக்குள் தள்ளுகிறார்கள். விநாயகனுக்கு நடக்கும் இந்த சித்திரவதைகளைக் கண்டு கைதட்டி, விசில் அடித்து, 'பாரத் மாதாக்கி ஜே' என்று தொண்டை கிழிய முழங்குகிறார்கள். "இதுவா கடவுள் பக்தி? இதுவா, தேசபக்தி?" என்று கேட்டால் 'மத விரோதி; தேச விரோதி' என்று எகிறி குதிக்கிறார்கள்.

புராண காலங்களிலேயே வனவிலங்குகள் சட்டம் மீறப்பட்டிருக் கிறது. யானையின் தந்தம் இப்போது வெட்டப்படுகிறது என்றால் பரமசிவன் தலையையே வெட்டி 'விநாயகனுக்கு' பொருத்தியிருக் கிறான், பாருங்கள். இதற்கும் நமது மோடி பெருமை பேசுவார்தான்!

மனிதனுக்கு யானை தலையைப் பொருத்திய 'உறுப்பு மாற்று' மருத்துவம் புராண காலத்திலேயே வந்து விட்டது என்று பூரித்துப் பேசியிருக்கிறார், இருக்காதா?

சொல்லப் போனால் குழந்தைகளை குதூகலிக்கச் செய்யும் ஒரு கார்ட்டூன் படத்துக்கான கதை, திரைக்கதைகளின் அம்சம் கொண்டவன் விநாயகன். அந்த விநாயகனுக்குத்தான் இந்த பக்தி இவ்வளவு பதட்டம்!

**கோடங்குடி மாரிமுத்து**

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை

# இடஒதுக்கீட்டுக் கொள்கையை ஜனநாயகப்படுத்தியவர் கலைஞர்

***சமூகநீதி தத்துவத்தில் அடங்கியிருந்த சமூகவியல் குறித்து கலைஞருக்கு அபாரமான புரிதல் இருந்தது என்று விடுதலை இராசேந்திரன் விளக்கினார்.***

*தம்மம் சிந்தனையாளர் பேரவை சார்பில் ‘கலைஞரின் பன்முக ஆளுமை’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் செப்.8, 2018 மாலை 5 மணியளவில் பெரியார் திடலில் உள்ள மணியம்மையார் அரங்கில் நடைபெற்றது. கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூலக அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வுக்கு கடைசி நேரத்தில் அனுமதி மறுக்கப் பட்டதால் மணியம்மையார் அரங்குக்கு மாற்றப் பட்டது. வெற்றி சங்கமித்ரா தலைமை தாங்கினார். வழக்கறிஞர் அருள்மொழி, ‘கலைஞரின் இந்துத்துவ எதிர்ப்பு’க் குறித்தும், இராஜன் செல்லையா ‘கலைஞரின் கலை இலக்கிய ஆளுமை’ குறித்தும், பூவிழியன், ‘கலைஞரின் சமூகநீதிப் பயணம்’ குறித்தும், விடுதலை இராசேந்திரன், ‘கலைஞரின் ஆட்சி நிர்வாகத் திறன்’ குறித்தும் பேசினர். தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர் டி.கே.எஸ். இளங் கோவன் நிறைவுரையாற்றினார்.*

*விடுதலை இராசேந்திரன் உரையில் குறிப்பிட்ட தாவது:*

*‘கலைஞரின் நிர்வாகத் திறன்’ என்ற தலைப்பின் கீழ் பேசுவதற்கு நான் பொருத்தமானவன் அல்ல; அவரோடு நெருங்கிப் பணியாற்றியவர்கள் மட்டுமே அவரது நிர்வாகத் திறன் பற்றிய புரிதல்களைப் பெற்றிருக்க முடியும். ஆனாலும், அவர் முதல்வராக ஆட்சியில் செயல்படுத்திய திட்டங்கள் சமூக நீதியில் அவர் காட்டிய முனைப்புப் பற்றி சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.*

*கலைஞர் முதல்வரானதிலிருந்தே அவரது தனிச் செயலாளராகவும் பதவி ஓய்வுக்குப் பிறகும் கலைஞரின் செயலாளராகவும் செயல்பட்ட இராஜ மாணிக்கம், அய்.ஏ.எஸ். கலைஞர் நிர்வாகத் திறன் குறித்து அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியிருக் கிறார்:*

*“தலைமைச் செயலாளர் கையெழுத்துப் போட்டிருக்கிறாரே என்று படிக்காமல் ஒரு கோப்பில்கூட அவர் கையெழுத்துப் போட மாட்டார். கேள்வி கேட்பார். அதன் மூலமாக அந்தப் பிரச்சினையை உள்வாங்கிக் கொள்வார். கோப்புகள் வழியாக மட்டும் பிரச்சினைகளை, திட்டங்களை அணுகாமல், கள நிலவரம் எப்படி இருக்கிறது என்று விசாரிப்பார். அவரிடம் உள்ள சிறப்பம்சம் என்னவென்றால், அதிகாரப் படிநிலையை உடைத்து எல்லோரிடமும் பேசுவார். உதாரணமாக, முதல்வர் கூட்டத்தில் தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர் பதவியில் இருப்பவர்கள்தான் பங்கேற்பார்கள். அதற்குக் கீழே உள்ளவர்களைக் கூட்டத்துக்கு அழைக்கும் மரபு கிடையாது. ஆனால், இவர் அதை உடைப்பார். கீழே உள்ளவர் விஷயாதி என்று தெரிந்தால், அவரை அழைத்துப் பேசுவார். அதே மாதிரி காவல் துறையை நிர்வகிக்கையில், நுண்ணறிவுப் பிரிவு சொல்கிற தகவல்களையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார். டி.ஜி.பியே சொன்னாலும், அதை மறுமுறை சரி பார்ப்பார். உள்ளூர்க்காரர்களிடம் விசாரிக்கச் சொல்வார். ‘சில காரியங்களை நிதானமாகச் செய்யவேண்டும்; சில காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டும்; மாற்றிச் செய்தால் மோசமான விளைவுகளே ஏற்படும்’ என்பார். கோப்புகளைத் தேங்கவிட மாட்டார். ஒரே நாளில் 250 கோப்புகளில் கையெழுத்திட்ட நாட்கள் உண்டு.*

*அவர் வேகத்துக்கு ஈடு கொடுப்பது சிரமமாக இருக்கும். சட்டமன்றத்தில் தன்னுடைய மானியக் கோரிக்கை வருகிறது என்றால், ஒரு வாரம் தயார் பண்ணுவார். சட்டமன்றத்துக்குப் போகும்போதுகூட, “இராத்திரி ஒண்ணு படிச்சேன்யா, அதுல சந்தேகம்யா’ என்று கேட்பார். அவர் இப்படி இருக்கும்போது அதிகாரிகள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைப்பார்! அரைகுறை வேலை அவருக்குப் பிடிக்காது. ஒரு வேலைமுடியும் வரை ‘ஃபாலோ’ செய்ய வேண்டும் என்று நினைப்பார். ஒரு உத்தரவு கடைசி வரை போய்ச் சேர்ந்திருக்கிறதா என்று பார்ப்பார். தமிழராக இருக்கும் அதிகாரி வரலாறு தெரியாமல் நடந்து கொண்டால், கடிந்து கொள்வார். அண்ணா சாலையை ‘மவுண்ட் ரோடு’ என்று சொன்னால், ‘என்ன சீஃப் செக்ரட்டரி, நீங்களே இப்படிச் சொல்லலாமா?’ என்பார். ‘பிற்பட்டோர்’ என்றால் கோபம் வரும். ‘பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட் டோர்’ என்று திருத்துவார். அரசுப் பணியைச் சமூகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகக் கருத வேண்டும் என்று வலியுறுத்துவார். மக்களுக்குத் திட்டங்களைக் கொண்டு செல்ல ஏதாவது தடைகளைச் சொல்லிக் கொண்டே இருந்தால் பிடிக்காது. தடைகளை உடைக்க வழி சொல்லுங்கள் என்பார்.*

*அவருடைய வேகத்துக்கு ஈடுகொடுத்த தலைமைச் செயலர்கள் என்றால், முதன்மையானவர் கே.என்.நம்பியார், அடுத்தது சபாநாயகம்.*

*அமைச்சர்கள் அனுப்பும் கோப்புகளில் அவர்கள் எழுதும் குறிப்பை வைத்தே அவர்களுடைய செயல்பாடுகளை எடை போட்டு விடுவார். நிறையச் சொல்லிக் கொடுப்பார். ஆனால், சட்டமன்ற நடவடிக்கைகளில் தீவிர முனைப்பு இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். ‘சட்டமன்றத்தை லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாதுய்யா, நாம ஆளுங் கட்சியே அதை முக்கியமாக நினைக்கலைன்னா, ஜனநாயகம் செழிக்காதுய்யா’ என்பார். ‘யாராவது குறை சொன்னால், அதைக் குறித்துக் கொண்டு உடனே சரி செய்ய வேண்டும், கோபப்படக் கூடாது’ என்பார். தரக் குறைவாக யாராவது பேசினால்கூட, ‘எதிர்க்கட்சிக்காரங்க நம்மை இந்திரன் சந்திரன்னா பாராட்டுவாங்க! கோமாளி, ஏமாளி, வெட்டிப்பய என்றுதான் பேசுவாங்க. ஜனநாயகத்தில் அதெல்லாம் அனுமதிக்கப்பட்டதுதான்’ என்பார். எல்லாவற்றுக்கும் மேலாக நேரம் தவறாமை. ‘ஏன்யா, சட்டமன்றம் 9 மணிக்குன்னா, 8.45க்கே வந்துட வேண்டாமா?’ என்பார். இளைஞர்களை – அவர்கள் எதிர்க் கட்சிக் காரர்களாக இருந்தாலும் சரி, தட்டிக் கொடுப்பார்.*

*சமூகநீதியோடு தொடர்புடையவை ஒவ்வொன்றுமே அவர் மனதுக்கு நெருக்கமானவை என்று சொல்லலாம். எல்லாச் சமுதாயத்தினரும் ஒரே இடத்தில் இணங்கி வாழும் இடமாக அவர் கொண்டு வந்த ‘பெரியார் நினைவுச் சமத்துவபுரம் திட்டம்’ அவர் இதயத்துக்கு மிக நெருக்கமான திட்டம். பெண்களுக்குச் சம சொத்துரிமையைக் கொண்டு வந்தபோது நெகிழ்ச்சியாக இருந்தார். 2006 முதல் அமைச்சரவைக் கூட்டம். ஒரு பேப்பரை எடுத்து எழுத ஆரம்பித்தார். “தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக லாம்” என்று எழுதினார். (என்னைப்போல்) பக்கத்திலிருந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும், இவை ஒவ்வொன்றுக்கும் பின்னிருந்த கனவுகள்!”*

**கோப்புகள் வழியாக மட்டும் பிரச்சினைகளைப் பார்க்காதவர்.**

*ஜாதி, மதக் கலவரங்கள் நடந்தால் மிகவும் வேதனைப்படும் கலைஞர், சட்டபூர்வமாக எடுக்கும் நடவடிக்கைகளைத் தவிர, யாரெல்லாம் இதன் பின்னணியில் இருக்கிறார்களோ, அதே சமூகத்தைச் சார்ந்த தி.மு.க. தலைவர்களை விட்டு அவர்களிடம் பேசச் சொல்வார்.*

*“ஏன் உங்க புத்தி இப்படிப் போகுதுன்னு கேளுங்கய்யா – என்பார்” என்று இராஜமாணிக்கம் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.*

*மாளிகையில் அமர்ந்து கொண்டு உளவுத் துறையும் அதிகாரிகளும் கூறுவதை மட்டுமே நம்பி செயல்பட்ட ஜெயலலிதா போன்ற முதலமைச்சர் களையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் சமூகத்தின் அடி மட்டத்திலிருந்து அரசியல் அதிகாரத்திற்கு உயர்ந்த ஒருவரின் நிர்வாகத் திறன் அதிகார எல்லைகளைக் கடந்து நிற்கும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அந்தத்துறைகளில் சிறந்து விளங்கிய ஆளுமைகளோடு எந்த நேரத்திலும் நேரடியாக தொடர்பு கெண்டு பேசுவது விவாதிப்பது என்ற அவரது பண்பு அவரது நிர்வாகத் திறனுக்கு வலிமை சேர்த்தது என்றே கூறலாம். உடனடியாக அவசரமாக எடுக்க வேண்டிய முடிவுகளிலும் அவர் முடிவெடுக்கத் தயங்கியதில்லை என்பதற்கு பெரியார் மறைந்தபோது பெரியாருக்கு அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் செய்த முடிவைக் குறிப்பிடலாம். அப்போது தலைமைச் செயலாளராக இருந்த சபாநாயகம் அவர்களை அழைத்து, ‘பெரியாருக்கு அரசு மரியாதை செய்ய வேண்டும்’ என்ற கருத்தை முன்வைத்தபோது, ‘பெரியார் எந்த அரசுப் பதவியிலும் இல்லையே’ என்று பதில் வந்தது. ‘காந்திக்கு எப்படி அரசு மரியாதை தரப்பட்டது?’ என்று கேட்டார் கலைஞர். ‘அவர் தேசத்தின் தந்தையாயிற்றே’ என்று தலைமைச் செயலாளர் கூறியபோது, “பெரியாரும் திராவிட இயக்கத்தின் தந்தை தான். ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இதனால் ஆட்சிக்கு ஆபத்து வந்தாலும் பரவாயில்லை” என்று முடிவெடுத்தவர் கலைஞர். பெரியாரின் இறுதி ஊர்வலத்தை தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறை படமாக்கியதோடு, அதைத் தமிழ்நாடு முழுதும் தியேட்டர்களில் வெளியிட்டது. காரல் மார்க்ஸ் இறந்தபோது ஏங்கல்ஸ் அவரது மறைவுக்கு வெளியிட்ட இரங்கல் செய்தி உலகப் புகழ் பெற்றது. “மார்க்சின் மூளை சிந்திப்பதை நிறுத்திக் கொண்டது” என்றார் ஏங்கல்ஸ். அதற்கு இணையாக கலைஞர் பெரியார் மறைவுக்குக் கூறிய இரங்கல் செய்தியைக் குறிப்பிடலாம். “பெரியார் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார்” என்று ஒற்றை வரியில் இலக்கியமாகக் கூறினார் கலைஞர்.*

*சமூக நீதியில் அவர் ஆட்சி காலத்தில் மிகுந்த கவலை எடுத்துச் செயல்பட்ட தலைவர் பிற்படுத்தப் பட்டோருக்கான தனி அமைச்சர் - அமைச்சகத்தை இந்தியாவிலேயே முதலில் உருவாக்கினார். அவர் முதலமைச்சராக வந்தவுடன், ஏ.என்.சட்ட நாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையத்தை நியமித்தார். அப்போது கல்வி வேலை வாய்ப்புகளில் 41 சதவீத இடஒதுக்கீடு அமுலில் இருந்தது. உச்சநீதிமன்றம் 50 சதவீதத்துக்கு மேல் இடஒதுக்கீடு போகக் கூடாது என்று ஒரு தீர்ப்பில் எல்லைக்கோடு போட்டதை பெரியாரிடம் சுட்டிக்காட்டியபோது, பெரியார் கலைஞரிடம், “50 சதவீதத்துக்கு மேல் தானே போகக் கூடாது; 49 சதவீத அளவுக்கு உயர்த்துங்கள்” என்று ஆலோசனை கூறினார். அதேபோல் கலைஞர் இடஒதுக்கீட்டை 49 சதவீதமாக உயர்த்தினார். அதே சட்டநாதன் ஆணையம் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் வருமான வரம்பு விதிக்கலாம் என்ற பரிந்துரை இடம் பெற்றிருந்தாலும், கலைஞர் அதை நிராகரித்தார். எம்.ஜி.ஆர். தனது ஆட்சி காலத்தில் 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு உத்தரவைப் பிறப்பித்தது, ஏ.என். சட்டநாதன் ஆணையம் பரிந்துரையைக் காட்டித்தான் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இடஒதுக்கீடு எனும் சமூக நீதிக் கொள்கையை காலத்தின் தேவை கருதி, அது மேலும் பரவலாக்கப் பட வேண்டும் என்ற நோக்கத்தில் மாற்றங்களைத் துணிந்து அமுல்படுத்தியவர் கலைஞர். 50 சதவீத பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதமும், இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதமும், பட்டியல் இனப் பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் கடை நிலையில் இருந்த அருந்ததியர் சமூகத்தினருக்கு 3 சதவீத உள் ஒதுக்கீடும் வழங்கி, அதற்கு சட்டப் பாதுகாப்பையும் தந்தவர் கலைஞர். ஆந்திராவில் பட்டியல் இனத்தவருக்கான உள் ஒதுக்கீடுகளை அங்கே ஆட்சியிலிருந்த தெலுங்கு தேசம் கட்சி கொணர்ந்த போது நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப்பட்டது. அந்த நிலை அருந்ததியினருக்கான இடஒதுக்கீட் டிலும் இஸ்லாமியருக்கான இடஒதுக்கீட்டிலும் வந்துவிடக் கூடாது என்று உரிய கவனத்தோடு சட்டப் பாதுகாப்புடன் அதை நிறைவேற்றினார்.*

*எல்லாவற்றையும்விட சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையான தத்துவம் குறித்து அவரிடம் எத்தகைய அபாரமான புரிதல் இருந்தது என்பதற்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். முதல் தலைமுறையாக ஒரு குடும்பத்தில் பட்டப்படிப்புப் படிக்க வரும் ஒருவருக்கு அவர் எந்த ஜாதியைச் சார்ந்தவராக இருந்தாலும் பார்ப்பனராக இருந்தாலும்கூட அய்ந்து கூடுதல் மதிப்பெண் வழங்க வேண்டும் என்ற அவரது திட்டம், அவரது சமூக நீதியின் சமூகவியல் பார்வையைக் கூர்மையாக வெளிப்படுத்திய திட்டமாகும். ஆனால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, நீக்கம் செய்து விட்டார்கள். கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இடஒதுக்கீட்டை அவர்தான் கொண்டு வந்தார். கலைஞரின் திட்டங்களையெல்லாம் எதிர்த்து வந்த ஜெயலலிதா, இத்திட்டத்தை மட்டும் ஏற்று 25 சதவீதமாக உயர்த்தினார். நீதிமன்றத்தில் வழக்கு வந்தது. கிராமப்புற இடஒதுக்கீடே இரத்தானது. ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத் தினார் கலைஞர்; அதையும் நீதிமன்றம் இரத்து செய்துவிட்டது.*

(தொடரும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தமிழ்க் குரிசில் படத்திறப்பு



09.09.2018 அன்று மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் நடந்த தோழர் தமிழ்க்குரிசில் படத்திறப்பு நிகழ்ச்சி காலை 10.30 மணியளவில் தொடங்கியது. தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தங்க மணி வரவேற்புரையாற்ற திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் நிர்வாகியாக இருந்து செயல்பட்ட வரும் தமிழ்நாடு தாய்த் தமிழ் கல்வியின் செயலாளராக இருந்தவரும், பெரியாரிய சிந்தனையாளரும், குடிஅரசு வெளியீட்டில் தொகுப்பு பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தலைமை யேற்று நடத்தியவருமாகிய தமிழ்க்குரிசில் படத்தை பேராசிரியர் கல்விமணி திறந்து வைத்தார். இந்த நிகழ்வின் ஏற்பாடுகளையும், உணவு ஏற்பாடுகளையும் மேட்டூர் நகர கழகத் தோழர்கள் செய்தார்கள்.

நிகழ்ச்சியில் நினைவேந்தல் உரையாக கோபி தாய்த் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் தாளாளர் குமணன், பள்ளி கல்வி பாதுகாப்பு இயக்கத்தின் பொறுப்பாளர் மூர்த்தி, தமிழ்வழி கல்விக் கழகத்தின் சார்பாக வெற்றிசெழியன், பல்லடம் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் இராஜேஷ் கண்ணா, சங்கரன் கோவில் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளி பொறுப்பாளராக இருந்த சங்கரராமன், வடகாடு தாய்த் தமிழ் பள்ளியின் தாளாளர் ராஜா, தமிழ் வழிக் கல்வி இயக்கத்தின் சின்னப்பா தமிழர், திண்டிவனம் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் தாளாளர் பூபால், புதுச்சேரியைச் சார்ந்தவரும் பிரான்ஸ் பாரிஸ் நகரத்தில் சுயமரியாதை இயக்கம் நடத்தி வந்தவரும் தாய்த் தமிழ்க் கல்வி இயக்கத்திற்கு பெரும் உதவியாக இருந்தவருமான கோபதி, திருப்பூர் பள்ளியின் பொறுப்பாளர் எழில் சுப்ரமணியம், திண்டிவனம் தாய்த் தமிழ்ப் பள்ளி தலைமையாசிரியர் மரிய அந்தோணி போன்ற தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர்களும், கரூர் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் கரூர் காமராசு, தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியின் முன்னாள் மாணவரும் இந்த ஆண்டு 10ஆம் வகுப்பில் 496 மதிப்பெண் பெற்று சேலம் மாவட்டத்தில் முதல் மாணவராக வந்தவருமான குறிஞ்சி மலர் ஆகியோருடன், சேலம் திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் சூரியகுமார், சேலம் மருத்துவ கல்லூரியின் பேராசிரியரும் மக்களுக்கான மருத்துவ சங்கத்தின் தலைவருமாகிய மருத்துவர் லட்சுமி நரசிம்மன், மேட்டூர் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர் ஆசிரியர் பாரி, பொறியாளர் அனுராதா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேட்டூர் தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார், அருந்ததியர் சாக்கியர் சங்கத்தின் நிறுவனரும், கவிஞருமான மதி வண்ணன், மேட்டூர் முல்லை வேந்தன் - கனகா இணையர் நினைவேந்தல் உரையை நிகழ்த்தினர்.

நிகழ்வின் இறுதியில் தமிழ்க்குரிசில் மகள் செம்மலர், குரிசிலின் உடன்பிறந்தவரான முருகேசன் நன்றியுரையாற்றினர். நிகழ்வில் பல்வேறு தரப்பினரும், கழகத் தோழர்களும், பெற்றோர்களுமான 250 பேர் பங்கேற்றனர்.

# பெரியார் விழா: திருப்பூர் தயாராகிறது

திராவிடர் விடுதலைக் கழக திருப்பூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 09.09.2018 அன்று வீரபாண்டி பெரியார் படிப்பகத்தில் முத்துலட்சுமி தலைமையில் நடந்தது. கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு மற்றும் மாவட்ட மாநகர் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

1. பெரியார் 140ஆவது பிறந்தநாள் அன்று 17.09.2018 மாலை 4 மணிக்கு திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து பேரணியாக புறப்பட்டு இரயில் நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு பெரியார் கூட்டமைப்பு சார்பில் மாலை அணிவிப்பு.
2. 24.09.2018 திங்கள் அன்று காலை 9 மணிக்கு தந்தை பெரியார் சிலையில் இருந்து இரு சக்கர வாகன ஊர்வலமாய் நகரில் 25 இடங்களில் கொடியேற்று விழா மிகச் சிறப்புடன் நடைபெற திட்டம் வகுக்கப்பட்டு கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் கொடியசைத்து பேரணியை துவக்கி வைக்கிறார்.
3. கல்வி உரிமை மீட்பு பரப்புரை பயணம் வெற்றி பெற பங்கெடுத்து அனைவரும் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்
4. 'பெண் ஏன் அடிமையானாள்' 1000 படிகளை திருப்பூரில் உள்ள மகளிர் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்த்து டிசம்பர் 24 நினைவு நாள் அன்று கட்டுரை போட்டி வைக்க தீர்மானிக்கப் பட்டது.

பிறந்தநாள் கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்ய குழு அமைத்தனர். 25 கொடி கம்பங்களிலும் கருப்பு வண்ணம் தீட்டி புதிய கொடி கட்ட செயல் திட்டம் வகுக்கப்பட்டது. பிறந்தநாள் கொண்டாட்ட செலவு நிதியாக இராமசாமி ரூ. 5000 மற்றும் கருணாநிதி ரூ.3000 அன்பளிப்பாகத் தர ஒப்புக்கொண்டனர். மற்ற தோழர்கள் கலந்தாலோசித்து பகிர்ந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் சிவகாமி, இணைய தள பொறுப் பாளர் விஜய்குமார், மாவட்ட அமைப்பாளர் அகிலன், சங்கீதா, இராமசாமி, கருணாநிதி, முத்து, முத்துலட்சுமி தனபால், அய்யப்பன், மணி, சைலஜா, இராஜசிங்கம், யாழினி, யாழிசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேலூரில் திராவிட வேர்கள் கருத்தரங்கம்



8.9.2018 சனிக்கிழமை காலை 10 மணியளவில் வேலூர் விரிஞ்சிபுரம் வி.எஸ்.பி மகாலில் திராவிட வேர்கள் சார்பாக கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கிற்கு எழுத்தாளர் டான் அசோக் தலைமை தாங்க திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, கல்வியாளர் பாலா கருத்துரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'கருஞ்சட்டை கலைஞர்' என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். அந்த நிகழ்வில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள், இளைஞரணி, மாணவரணி தோழர்கள் திராவிட கருத்தியலில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள், திராவிடர் விடுதலைக் கழகத்தின் வேலூர் மாவட்ட அமைப்பாளர் நெமிலி திலீபன், குடியாத்தம் சிவா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றார்கள்.

## பாரூக் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணம் செலுத்தி உதவிய தோழர்கள்

மதவெறிக்கு பலியான கழகத் தோழர் பாரூக்கின் குழந்தைகளுக்கான 2018 முதல் பருவ பள்ளிக் கட்டணம் ரூ46,492/- செலுத்தி அவர்களது இரண்டாம் வருடத்திய கல்வியினை துவக்கி வைத்துள்ள வழக்கறிஞர் சிவகுமார், வழக்கறிஞர் கலையரசு ஆகியோருக்கும், கடந்தாண்டு இரண்டாம் பருவ கட்டணம் ரூ. 34000 செலுத்திய மதுரை வழக்கறிஞர் தன பாலாஜி அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி.

பாரூக் குழந்தைகளை இஸ்லாமிக் பள்ளியில் இருந்து எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆண்டுக்கு இரண்டு பருவக்கட்டணம் செலுத்த வேண்டும். வாய்ப்புள்ள தோழர்களிடம் உதவி பெற்று செலுத்தி வருகிறோம். வாய்ப்பிருக்கும் தோழர்கள், ஆதரவாளர்கள், பள்ளிக் கட்டணத்திற்கு உதவ விரும்பினால் மகிழ்வோம்.

**நேருதாஸ், திராவிடர் விடுதலைக் கழகம் , கோவை மாவட்டம்**


## தற்போது விற்பனையில்

**'நிமிர்வோம்'** – ஆகஸ்டு 2018 இதழ்




- மக்கள் பேராதரவோடு நடந்த பரப்புரை - தலையங்கம்
- உமர் காலித்தை ஆர்.எஸ்.எஸ் கொல்லத் துடிப்பதேன்?
- பெண்களின் 'தீட்டும்' அய்யப்பன் 'புனிதமும்'
- அணு உலைக்கழிவு - அதிர்ச்சியூட்டும் தகவல்கள்
- ஜாதி சங்க மாநாடுகளில் ஜாதியை எதிர்த்த பெரியார் (2)
- தமிழ் இலக்கியங்களில் மூடநம்பிக்கைகள் (2)

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 14th September 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN